# 285 மாணவர்கள் கல்வி சுற்றுலா

சென்னை, மார்ச் 16: சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மெட்ரோ ரயில் மற்றும் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வசதிகள், தொழில்நுட்பங்கள் குறித்து மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. அதன்படி, மாதந்தோறும் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமானநிலையம் மற்றும் பரங்கிமலை வழித்தடத்திலும், வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ் வழியாக விமான நிலையம் வரையிலான வழித்தடத்திலும் கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்படுகின்றனர்.

அதன்படி கடந்த 2 நாட்களில் திருவண்ணாமலை மாவட்டம் சென்னாவரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, ஆரணி நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் திருச்சி, பெருகமணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை சேர்ந்த 150 பேர் என மொத்தம் 285 மாணவ, மாணவியர் மெட்ரோ ரயிலில் சுற்றுலா அழைத்துச்செல்லப்பட்டனர்.

அப்போது, அவர்களுக்கு மெட்ரோ ரயிலின் சிறப்பம்சங்கள் குறித்து விளக்கப்பட்டது. இதேபோல், பிற மாவட்டங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர் கல்விப்பயணம் செல்ல pro@cmrl.in அல்லது ampr.cmrl2@gmail.com ஆகிய மின்னஞ்சலில் தொடர்புகொள்ளலாம் எனவும் மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.